# அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியல் கல்லூரியில் இயந்திரவியல் மற்றும் கட்டிடவியல் துறை சார்பாக கட்டிடவியல் மற்றும் இயந்திரவியல் துறையில் புதுமையான நடைமுறைகள் என்ற தலைப்பில் "தேசிய அளவிலான கருத்தரங்கம்"

எருமப்பட்டி, அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியல் கல்லூரியில் கட்டிடவியல் மற்றும் இயந்திரவியல் துறை சார்பாக "கட்டிடவியல் மற்றும் இயந்திரவியல் துறையில் புதுமையான நடைமுறைகள்" என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியில் தாளாளர் **திரு.M.மணி** அவர்கள் தலைமையேற்று துவக்கிவைத்து சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக PSG பொறியியல் கல்லூரியின் இயந்திரவியல் துறையின் பேராசிரியர் **திரு.Dr.V.பிரபுராஜா** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் கல்லூரி முதல்வர் முனைவர் **திரு.P.பழனிசாமி** அவர்கள் வாழ்த்துரையாற்றினார். கல்லூரியின் துணை முதல்வர் **திரு.A.நடராஜன்** அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார். இயந்திரவியல் துறை தலைவர் **திரு.K.வேலுசாமி** மற்றும் கட்டிடவியல் துறை தலைவர் **திரு.B.தியாகராஜன்** அவர்களும் வரவேற்புரையாற்றினர்.

**கல்லூரி தாளாளர் திரு M.மணி அவர்கள் பேசியதாவது:**

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் "இயந்திரவியல் மற்றும் கட்டிடவியல் துறையின் புதுமையான நடைமுறைகள்" என்ற தேசிய அளவிலான கருத்தரங்கம் இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ற தலைப்பாகும். "இயந்திரவியல் மற்றம் கட்டிடவியல் ஆகிய இரண்டும் இன்றைய பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையானது. தற்காலத்தில் கட்டிடங்கள் வெகு விரைவில் கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன உதாரணத்திற்கு ஒரு ஜவுளி நிறுவனம் தன் கிளையை நிறுவ எடுத்துக்கொண்ட நாட்கள் 15 தினங்கள் மட்டுமே. அந்த 15 நாட்களுக்குள்

இரவு பகலாக வேலை செய்து வர்ண வேலை உட்பட அனைத்தையும் முடித்து உள்ளனர் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். மேலும் இதுபோல புதிய உத்திகளை மேற்கொண்டு ஒரு காலத்தில் "சாம்பல் ஏரியாக" இருந்த மேட்டூர் அனல் மின் நிலைய கழிவுகளை இன்று சாம்பல் கற்களாக மாற்றி கட்டிடங்களை கட்ட பயன்படுத்தும் மூலபொருளாக மாறி உள்ளது. இவ்வாறு "எந்த ஒரு பொருளும் குப்பை அல்ல "Nothing is waste" அனைத்தையும் மறு உரு பெறச் செய்யலாம் என்பதை இன்றைய புதுமையான நடைமுறைகள் உறுதி செய்துள்ளன. மேலும் இயந்திரவியலில் அன்றைய நாட்களில் 1 காலன் எரிபொருள் 4.546 லிட்டர்களுக்கு 1 மைல் என்ற கணக்கில் இருந்த வாகன பயணம் இன்று 1 லிட்டருக்கு 100 கிலோ மீட்டர்கள் வரை பயணம் செய்யும் அளவு முன்னேறி உள்ளது. இங்கு பங்கு பெற்றிருப்போர் அனைவரும் "இயந்திரவியல் மற்றும் கட்டிடவியல் துறையில் புதுமையான நடைமுறைகள்" என்ற தலைப்பை பல்வேறு கோணங்களில் வெளியிட தயாராக உள்ளீர்கள் அதை ஆராய்ந்து எவ்வாறு என்பதை நீங்கள் திறப்பட வெளியிட்டு "மாசு மற்றும் புகை இல்லா உலகை உருவாக்க" எனது மனமார்ந்த பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று உரையாற்றினார்.

**சிறப்பு விருந்தினர் முனைவர் V.பிரபுராஜா அவர்கள் பேசியதாவது:**

இன்றைய காலகட்டத்தில் நீங்கள் உங்கள் துறைகளின் புதுமையான நடைமுறைகளை அறியவும் அதை வெளிப்படுத்தவும் தேசிய மற்றும் உலகலாவிய கருத்தரங்குகளில் உங்களுடைய கருத்துகளையும், கண்டுபிடிப்புகளையும் முன்வைத்து கலந்து கொண்டு வெளிப்படுத்த வேண்டும், அதன் மூலம் சிறப்பான முன்னேற்றங்களை அடையலாம். தற்போதுள்ள இயந்திரவியல் நிறுவனங்கள் படிப்படியான மாற்றங்களை ஏற்படுத்தியே முன்னேற்றம் அடைந்துள்ளன. இவற்றில் மகிழுந்து நிறுவனங்கள் தங்களுடைய தயாரிப்பு முறைகளில் கையால் பல முறை வரைந்து பின் அதை மாற்றியமமைத்து இறுதி செய்து வடிவமைத்து வந்தன ஆனால் தற்காலத்தில் கணிணியை கொண்டு எந்த ஒரு பாகத்தையோ அல்லது முழுவடிவத்தையோ மாற்றியமைக்க முடியும். இம்முறையை அனைத்து துறைகளும் பின்பற்றுகின்றன. இன்றைய காலகட்டங்களில் அனைத்து

நிறுவனங்களும் பிரச்சனைகளுக்கு தீர்வை மட்டுமே எதிர்பார்க்கின்றன அதற்கு உரிய சிறப்பு நிபுணர்களையே எதிர்பார்க்கின்றன, அவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப நமது மாணவர்கள் தங்களது திறமைகளை மேம்படுத்தி கொள்ளவேண்டும். "கற்றலும், நன்கு அனுபவமுள்ள ஒரு குழுவுடன் இணைந்து பணியாற்றுதலும் மேலும் அறிவு சார் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு நமது கருத்துகளை முன்வைப்பதும்" நமது தகுதியையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள வழிவகுக்கும்.

"ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்கள் மூலம் தங்களை மேம்படுத்திக் கொள்கிறார்கள்" ஒரு பிரச்சனையை தவிர்க்க தெளிவான முடிவுகளை எடுக்க வேண்டும். அதுவும் சரியானதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் ஒரு துறையை தேர்ந்தெடுத்து அந்த துறையின் நுணுக்கங்களை நன்கு கற்று அறிந்து அவற்றில் உருவாகும் குறைகளை நிவர்த்தி செய்யும் அளவு தங்களுடைய தகுதியை வளர்த்து கொள்ள வேண்டும். இதனையே அனைத்து நிறுவனங்களும் எதிர்பார்க்கின்றன. இயந்திரத்தை இயந்திரதனமாக உபயோகிப்போரை விரும்புவதில்லை. மேலும் மாணவர்கள் அனைவரும் ஒரு பெரிய நிறுவனத்தில் பணியிலமர்வதை மட்டும் சிந்திக்காமல் ஒரு நிறுவனத்தை உருவாக்க முயற்சிகளை மேற்கொண்டு அதில் புதுமையான நடைமுறைகளை புகுத்தல் வேண்டும். அதற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன் என்று உரையாற்றினார்.

இக்கருத்தரங்கில் இக்கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 27க்கும் மேற்பட்ட பல்வேறு கல்லூரிகளிலிருந்து மாணவர்கள், கலந்து கொண்டு 80க்கும் மேற்பட்ட தங்கள் கருத்துகளை அறிக்கைகளாக வழங்கினர்.

விழாவில் இறுதியாக இயந்திரவியல் துறை முதுகலை மாணவர் செல்வன் அடின்சன் பவுல் அவர்கள் நன்றியுரை கூறினார்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை இயந்திரவியல் மற்றும் கட்டிடவியல் துறை பேராசிரியர்களும் மாணவர்களும் செய்திருந்தனர்.